3. அறிவிப்பு

பேரவை அலுவலில் மாற்றம்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 13-6-2018 அன்று எடுத்துக்கொள்வதாக இருந்த மானியக் கோரிக்கை எண் 26-வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை மற்றும் 9-7-2018 அன்று எடுத்துக்கொள்வதாக இருந்த மானியக் கோரிக்கைகள் எண் 38-பொதுத் துறை, 1-மாநிலச் சட்டமன்றம், 2-ஆளுநர் மற்றும் அமைச்சரவை, 16-நிதித் துறை, 36-திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை, 50-ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும், 35-பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை ஆகியவை 5-7-2018 மற்றும் 6-7-2018 ஆகிய நாட்களில் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டு, அவற்றிற்கு 9-7-2018 அன்று பதிலுரை வழங்கப்படும் என்றும், 5-7-2018 அன்று எடுக்கப்படுவதாக இருந்த மானியக் கோரிக்கைகள் எண் 46-தமிழ் வளர்ச்சி (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை), 47-இந்து சமய அறநிலையத் துறை (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை), 49-இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை ஆகியன 13-6-2018 அன்றும், 6-7-2018 அன்று எடுத்துக்கொள்வதாக இருந்த மானியக் கோரிக்கைகள் எண் 12-கூட்டுறவு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) 13-உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) ஆகியன 2-7-2018 அன்றும் எடுத்துக்கொள்ளப்பெறும் என்பதைப் பேரவையின் ஒப்புதலோடு நான் தெரிவித்துக்கொள்கிறேன்.*

முற்பகல் 11-50

4. அறிக்கைகள் அளித்தல்

அரசு உறுதிமொழிக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். அரசு உறுதிமொழிக் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ராஜா, அரசு உறுதிமொழிக் குழுவினுடைய தலைவர் அவர்கள்.*

திரு. சி. ராஜா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களை வணங்குகிறேன். தமிழக மக்களின்*

2018 ஜூன் 7] *[திரு. சி. ராஜா]*

வாழ்வாதார உரிமையை மீட்டெடுக்க காவேரி நீர் மேலாண்மை ஆணையம் அமைத்திடவும், மத்திய அரசிதழில் இடம்பெறவும், சட்டப் போராட்டம் நடத்தி வெற்றி கண்டு, தூத்துக்குடி மக்களின் கோரிக்கையை ஏற்று, ஸ்டெர்லைட் ஆலையை நிரந்தரமாக மூட அரசாணை பிறப்பித்து, தமிழக மக்களின் நலன் கருதி, தமிழகத்தில் வரும் ஜனவரி முதல் பிளாஸ்டிக் பொருட்களுக்கு தடை விதித்து நல்லாட்சி செய்துவரும் எங்களது மண்ணின் மைந்தர், குடிமராமத்து மன்னன் எங்களது அண்ணன், எனது அரசியல் ஆசான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை வணங்குகிறேன். மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களையும் வணங்குகிறேன். சங்கரி சட்டமன்றத் தொகுதியிலே நான்கு முறை வென்று பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தியுள்ள மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களையும் வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 2016-2018 ஆம் ஆண்டிற்கான அரசு உறுதிமொழிக் குழுவின் இருபத்தேழாவது முதல் முப்பதாவது வரையிலான நான்கு அறிக்கைகளை குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கின்றேன்.

5. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

(அ) தமிழ்நாடு தொழில் நிறுவனங்கள் (தேசிய, பண்டிகை மற்றும் சிறப்பு விடுமுறை நாட்கள்) திருத்தச் சட்டமுன்வடிவு, 2018

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்). 2018 ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழில் நிறுவனங்கள் (தேசிய, பண்டிகை மற்றும் சிறப்பு விடுமுறை நாட்கள்) திருத்தச் சட்டமுன்வடிவு, மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு டாக்டர் (திருமதி) நிலோபர் கபில்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

“2018 ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழில் நிறுவனங்கள் (தேசிய, பண்டிகை மற்றும் சிறப்பு விடுமுறை நாட்கள்) திருத்தச் சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்”

எனக் கோருகிறேன்.